

# தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயப் பிரச்சினைக்கு



சிப்பாங், மார்ச் 22-

ஜாலான் மஸ்ஜிட் இந்தியா கோலாலம்பூரில் உள்ள தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தை வேறு இடத்திற்கு மாற்றும் பிரச்சினை தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சாம்பியன் ஆக விரும்ப வேண்டாம் என பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நேற்று நினைவுறுத்தினார்.

தற்போது சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

# நல்ல தீர்வு

## பிரதமர் வலியுறுத்தினார்

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நல்ல வழிகளை அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர் என்று அவர் சொன்னார். பிரச்சினை என்னவென்றால், இந்து சமய நடவடிக்கைகளில் சம்பந்தமே படாத ஒரு வழக்கறிஞர் உட்பட சமயம் மீது சவாரி செய்வோர் சாம்பியன் ஆகப் பார்க்கின்றனர்.

பக்கம் 13

### முதல் பக்கத் தொடர்ச்சி

**தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய...**

சம்பந்தப்பட்ட கோவில் உடைக்கப்படப் போகிறது போன்று அறிக்கைகளை வெளியிடுகின்றனர் என்று பிரதமர் கூறினார்.

எந்த கோவில்களும் உடைபடுவதை பிரதமர் என்ற முறையில் என்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது என்று அவர் கூறினார்.

நேற்று சுல்தான் அப்துல் சமாட் கேஎல்ஐஏ பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை தொழுகையை நிறைவேற்றிய பின்னர் அவர் நிருபர்களிடம் பேசினார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான நிலத்தின் ஒரு சிறிய பகுதியில் தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் உள்ளது.

அந்த நிலத்தின் உரிமையாளர் மேற்கொள்ளும் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படும் என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் உறுதியளித்திருக்கிறது.

இந்த ஆலயத்திற்கு ஒரு புதிய மாற்று இடம் அடையாளம் காணப்பட்டிருக்கிறது என்றும் மாநகர் மன்றத்தின் வர்த்தக திட்டப் பிரிவு அறிக்கை கூறியது.

சம்பந்தப்பட்ட அந்த நிலம் அரசாங்கத்திற்கு சொந்தமானது அல்ல என்று பிரதமர் கூறினார். மாறாக, 2012ஆம் ஆண்டு தொடங்கி அந்த தனியார் நிறுவனத்திற்கு .சொந்தமான நிலமாக உள்ளது. அந்த நிலத்தில் பள்ளிவாசலை எழுப்ப நில உரிமை பெற்ற நிறுவனம் முடிவு செய்திருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆக, அந்த ஆலயம் அனுமதி பெறாத ஒரு பழைய ஆலயமாக உள்ளது. ஆனால், நமது சுபீட்சமான உறவை உறுதிப்படுத்த நிலத்தின் உரிமையாளரான நிறுவனம் ஆலயத்தை வேறு இடத்திற்கு மாற்ற கொஞ்சம் உதவி வழங்கவும் இணக்கம் தெரிவிக்கிறது.

ஏதும் பிரச்சினை ஏற்படக்கூடாது என்பதற்காக கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஆலயத்திற்கு மாற்று நிலத்தை அடையாளம் கண்டுள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

ஆலயத் தரப்பினர் சட்டப்பூர்வ நிலத்தை பெறுவதற்கு சரியான வழிமுறையை தேட வேண்டும். அங்கீகாரத்துடன் சட்டப்பூர்வ நிலத்தை ஆலயத் தரப்பு பெறுவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு நல்ல முறையில் தீர்வு காணமுடியும் என்று அவர் கூறினார்.

பள்ளிவாசல் நிர்மாணிக்கப்படும். ஆலயத்திற்கான நிலமும் வழங்கப்படும். இந்தப் பிரச்சினையை நல்லமுறையில் தீர்ப்போம் என்றும் அவர் கூறினார்.